அக்னிஹோத்ரத்தை அதாவது துனியை மசூதியில் எப்போதும் எரியவிட்டுக் கொண்டிருந்தார். ஒரு மாதத்திற்குப் பின்னர் புண்டலிக்ராவும் மற்றவர்களும் தேங்காயுடன் ஷீர்டிக்குப் புறப்பட்டு மன்மாடை வந்தடைந்தனர். தாகமாக இருந்ததால் ஓர் ஓடைக்குத் தண்ணீர் பருகச் சென்றனர். வெறும் வயிற்றில் தண்ணீர் குடிக்கக்கூடாதாகையால் கொஞ்சம் சிவடா என்ற காரம் கலந்த அவலை சிற்றுண்டியாக உட்கொண்டனர். அது அதிகக் காரமாக இருந்ததால் யாரோ ஒருவர் தேங்காயை உடைத்து தேங்காய்ப்பூவை அதனுடன் கலந்துவிடலாம் என்று கூறி அதேபோல் செய்தும் விட்டார். சிவடாவை அதிகச் சுவையுள்ளதாகவும், நாவுக்கு ருசியுள்ளதாகவும் செய்துகொண்டனர். துரதிர்ஷ்டவசமாக அந்தத் தேங்காய் புண்டலிக்ராவிடம் ஒப்படைக்கப்பட்ட தேங்காயாக இருந்தது.

அவர்கள் ஷீர்டியை நெருங்கியதும் புண்டலிக்ராவ், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொருளாகிய தேங்காய் உடைக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுவிட்டது என்பதை வெகுவருத்தத்துடன் அறிந்தார். பயந்து நடுங்கிக்கொண்டு ஷீர்டிக்கு வந்து சாயிபாபாவைப் பார்த்தார். பாபா முன்னமேயே தேம்பே ஸ்வாமி தேங்காய் அனுப்பியுள்ள கம்பியில்லாத் தந்தியின் செய்தியைப் பெற்றுவிட்டார். பாபா தாமாகவே தமது சகோதரன் கொடுத்தனுப்பியுள்ள பொருளை முதலில் கொடுக்கும்படி புண்டலிக்ராவிடம் கேட்டார். அவர் பாபாவின் பாதங்களைப் பிடித்துக்கொண்டு தமது குற்றத்தையும் கவனமின்மையையும் கூறி, மனம் வருந்தி பாபாவின் மன்னிப்பை வேண்டினார். மற்றொரு தேங்காயை அதற்குப் பதிலாகக் கொடுத்துவிடுவதாகக் கூறினார். ஆனால் அத்தேங்காய்க்கு இணையாக வேறொன்றை ஈடுசெய்ய முடியாதென்றும், சாதாரணக் காயைக் காட்டிலும் பல மடங்கு அது உயர்ந்ததென்றும் கூறி பாபா அதைப் பெறுவதற்கு மறுத்துவிட்டார். மேலும் பாபா கூறினார்,‘‘இனிமேல் இவ்விஷயத்தைப்பற்றி நீ கவலைகொள்ளத் தேவையில்லை. எனது விருப்பத்தின்

காரணமாகவே தேங்காய் உன்னிடம் ஒப்படைக்கப்பட்டு முடிவில் உடைக்கப்பட்டும் விட்டது. செயல்களின் கர்த்தாவாக உன்னையே ஏன் நீ ஆக்கிக்கொள்கிறாய்? நற்கருமங்களையோ அல்லது தீயசெயல்களையோ செய்யும் கர்த்தாவாக உன்னை நீயே எண்ணிக்கொள்ளும் உணர்வை அனுமதிக்காதே. எல்லாவற்றிலும் முழுமையாக அஹங்காரமற்று இரு. அதனால் உனது ஆன்மிக முன்னேற்றம் துரிதமடையும்'' என்றார். எத்தகைய அழகிய ஆன்மிக போதனையை இந்நிகழ்ச்சியின் மூலம் பாபா உணர்த்தியிருக்கிறார்!

## பாலாராம் துரந்தர் (1878 – 1925)

பாலாராம் துரந்தர், பம்பாய் சாந்தாகுருஸைச் சேர்ந்த பதாரே பிரபு இனத்தைச் சேர்ந்தவர். அவர் பம்பாய் ஹைகோர்ட்டின் வக்கீலாகவும், சிறிது காலம் பம்பாய் அரசாங்க சட்டப்பள்ளியின் (Law School) தலைவராகவும் பணியாற்றினார். துரந்தர் குடும்பம் முழுவதுமே தெய்வபக்தியும், மத உணர்வும் கொண்டது. பாலாராம் தனது இனத்தாருக்குச் சேவை செய்தார். அதைப்பற்றி ஒரு கட்டுரையை எழுதி அதைப் பதிப்பித்தார்.

பின்னர் அவர் ஆன்மிக மத விஷயங்களுக்கு திரும்பினார். கீதையையும், அதற்கான வியாக்கியானமான ஞானேஷ்வரியையும், மற்ற தத்துவ நூல்களையும், நுண்ணியல் கோட்பாட்டு நூல்களையும் ஆழ்ந்து படித்தார். அவர் பண்டரீபுரத்து விட்டோபாவின் பக்தர். பாபாவுடன் 1912ல் தொடர்பு கொண்டார். அதற்கு ஆறு மாதங்களுக்குமுன் பாபுல்ஜி, வாமன்ராவ் என்ற அவரின் இரு சகோதரர்களும் ஷீர்டிக்கு வந்து பாபாவின் தரிசனத்தைப் பெற்றனர். வீடு திரும்பி அவர்களின் இனிய அனுபவங்களை பாலாராமுக்கும், குடும்பத்தினருக்கும் எடுத்துரைத்தனர். அதன் பின்னர் அவர்களெல்லோரும் சாயிபாபாவைத் தரிசிக்கத் தீர்மானித்தார்கள்.

அவர்கள் ஷீர்டிக்கு வரும்முன்னரே பாபா வெளிப்படையாக ''இன்று எனது தர்பாரைச் சேர்ந்த பெரும்பாலோர் வருகிறார்கள்'' என உரைத்தார். துரந்தர்

சகோதரர்கள் முன்கூட்டியே செய்தி ஏதும் அனுப்பவில்லையாதலால், மற்றவர்களிடமிருந்து பாபா கூறிய இக்குறிப்பைக் கேட்டு ஆச்சரியமடைந்தனர். மற்றவர்கள் எல்லோரும் பாபாவின்முன் வீழ்ந்து வணங்கி அவருடன் உரையாடிக்கொண்டிருந்தனர். பாபா அவர்களிடம் ''நான் முன்னரே குறிப்பிட்ட எனது தர்பார் மக்கள் இவர்களே'' எனக்கூறி, துரந்தர் சகோதரர்களிடம் ''கடந்த அறுபது தலைமுறைகளாக நாம் ஒருவரோடொருவர் உறவுபூண்டு இருக்கிறோம்'' என்றார். அச்சகோதரர்கள் எல்லோரும் எளிமையுடனும், பணிவுடனும் உற்றுப் பார்த்தவண்ணம் நின்றிருந்தனர். கண்ணீர், தொண்டை அடைத்தல், மயிர்க்கூச்செறிதல் முதலான எல்லா சத்துவ உணர்வுகளும் அவர்களை உருக்கின.

அவர்களெல்லோரும் மகிழ்ச்சியடைந்தனர். பின்னர் அவர்கள் தங்களது இருப்பிடத்திற்குச் சென்று உணவு உட்கொண்டு சிறிது களைப்பாறிவிட்டு மீண்டும் மசூதிக்கு வந்தனர். பாபாவுக்கு, பாலாராம் அமர்ந்து அவரது கால்களை பிடித்துவிட்டுக்கொண்டிருந்தார். சில்லிம் என்ற மட்குழாயில் புகைபிடித்துக்கொண்டிருந்த பாபா, அதை அவரிடம் நீட்டிப் புகைபிடிக்குமாறு அழைத்தார். புகைபிடித்து வழக்கமில்லை எனினும், பாலாராம் அக்குழாயை வாங்கிக்கொண்டு பெருஞ்சிரமத்துடன் புகைபிடித்துவிட்டு பக்தியுடன் வணங்கி அதைத் திருப்பி அளித்தார். பாலாராமுக்கு இதுவே மிகமிகப் புனிதமான நேரம். ஆறு ஆண்டுகளாக அவர் ஆஸ்துமாவால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார். இப்புகை அவரை முழுவதுமாக குணப்படுத்தியதுடன் மீண்டும் அவ்வியாதிக்கு உட்படுத்தவேயில்லை. ஆறு ஆண்டுகளுக்குப்பின் ஒரு குறிப்பிட்ட தினத்தில் மீண்டும் அவருக்கு ஆஸ்துமாவின் தாக்குதல் நேரிட்டது. இது பாபா மஹாசமாதி அடைந்த அதே நேரமாகும்.

அவர் சென்றிருந்த தினம் வியாழக்கிழமையாதலால் துரந்தர் நண்பர்கள் சாவடி ஊர்வலத்தை அன்று இரவு கண்டுகளிக்கும் நல்லதிர்ஷ்டம் பெற்றிருந்தனர்.

சாவடியில் ஆரத்தி நிகழ்ச்சியின்போது பாலாராம் பாபாவின் முகத்தில் பாண்டுரங்கரின் ஜோதியைக் கண்டார். மறுநாள் காலை காகட் ஆரத்தியின்போதும் அதே அபூர்வ நிகழ்ச்சியை, அதாவது *அவரின் அன்புக்குரிய தெய்வமான பாண்டுரங்கரின் ஜோதி பாபாவின் முகத்தில் ஒளிர்ந்ததைக் கண்டார்.*

பாலாராம் துரந்தர் மராத்தியில் மஹாராஷ்ட்ர ஞானி துகாராமின் வாழ்க்கைச் சரிதத்தை எழுதினார். ஆனால், அதன் பதிப்பைக் காண அவர் உயிருடனிருக்கவில்லை. பின்னர் 1928ல் அவரது சகோதரர்களால் பிரசுரிக்கப்பட்டது. பாலாராமின் வாழ்க்கையைப்பற்றிக் கொடுக்கப்பட்டுள்ள ஒரு சிறுகுறிப்பு அந்நூலின் ஆரம்பத்தில் உள்ளது. பாலாராமைப் பற்றிய மேற்கூறிய தகவல் அதில் முழுவதுமாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது. (அந்த புத்தகத்தின் 6ஆம் பக்கத்தில் காண்க).

***ஸ்ரீ சாயியைப் பணிக***

***அனைவர்க்கும் சாந்தி நிலவட்டும்***





# முடிவுரை

நாம் 51வது அத்தியாயத்தை முடித்துவிட்டு கடைசி அத்தியாயத்திற்கு (மூல நூலில் 52வது அத்தியாயம்) வருகிறோம். இதில் முடிவுரையாகச் சொல்லும்போது ஹேமத்பந்த் மராத்தியப் புனித நூல்களில் உள்ளபடி இதுவரை உள்ள அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள விஷயங்களை பாடல்களாக அட்டவணைப்படுத்தி எழுதப்போவதாகக் கூறியிருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அம்மாதிரி அட்டவணை ஹேமத்பந்தின் எழுத்துப் பிரதிகளில் இல்லை.

எனவே பாபாவின் ஆசிபெற்ற சிறந்த பக்தரான தாணேவைச் சேர்ந்த மாஜி மம்லதார் திரு B.V. தேவ் என்பவர் அதை அமைத்து வழங்கினார். ஆங்கிலப் புத்தகங்களில் ஆரம்பத்தில் அட்டவணை கொடுத்து ஒவ்வொரு அத்தியாயத்தில் கண்டுள்ளவற்றை அதன் தலைப்பில் கொடுப்பதுபோல் இந்த அத்தியாயத்தில் கண்டுள்ளவற்றை அட்டவணையின் கடைசியாகக் கருதவேண்டாம். எனவே இதை முடிவுரையாகக் கருதுவோம். துரதிர்ஷ்டவசமாக இந்த அத்தியாயத்தின் கையெழுத்துப் பிரதியைச் சரிபார்த்து அச்சிடும் வரையில் ஹேமத்பந்த் உயிருடன் இல்லை. அது அச்சகத்துக்கு அனுப்பப்படும் சமயம் தேவ் அவர்கள் அவற்றின் முடிவற்ற நிலையையும் சில இடங்களில் புரிந்துகொள்ள முடியாத நிலையில் இருப்பதையும் கண்டார். ஆயினும் அது அவ்வாறே பிரசுரிக்கப்பட வேண்டியதாயிற்று. அவற்றின்

முக்கியமான தலைப்புகள் இங்கு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

## சத்குரு சாயி மகிமை

விருப்பு வெறுப்பு இல்லாதவரும், உயர்வு தாழ்வுகளைக் கருதாதவரும், எவருக்கு பக்தர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாகக் காணப்படுகிறார்களோ, எவர் உயிரினங்கள் எல்லாவற்றிலும் எவ்வித பேதமுமின்றி கலந்து நிற்கிறாரோ, எவர் இந்த அண்ட சராசரங்களில் உள்ள அசையும் - அசையாப் பொருட்களை பகவான் பிரம்மனுடைய ரூபத்தில் உண்டாக்கி வீடுகள், அரண்மனைகள் மற்றும் ஆகாயம் இவை யாவற்றையும் சூழ்ந்து நிற்கிறாரோ அந்த சமர்த்த சாயியை சாஷ்டாங்கமாக நமஸ்கரிக்கிறோம்.

*அவரை நினைத்தாலும், சரணடைந்தாலும் அவர் நமது எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றி நம்மை வாழ்வின் லட்சியங்களை அடையச் செய்கிறார்.*

லோகாயத இச்சைகளாகிய இந்த சமுத்திரத்தைக் கடப்பது மிகக் கடினம். மோகம் என்ற அலைகள் உயர்ந்து, தீய எண்ணங்களாகிய கரையை நோக்கி ஓடி மோதுகின்றன. ஆதலால் நமது மன வலிமையாகிய மரங்கள் வேருடன் வீழ்த்தப்படுகின்றன. அஹங்காரமென்னும் காற்று கடுமையாக வீசி, கடலைக் கொந்தளிக்கச் செய்கிறது. வெறுப்பு, கோபமாகிய முதலைகள் பயமின்றித் திரிகின்றன. நான், எனது என்ற எண்ணங்களும் மற்ற சந்தேகங்களும் நீர்ச்சுழல்களாக இடையறாது சுற்றிக்கொண்டிருக்கின்றன. திட்டுதல், வெறுத்தல், பொறாமை ஆகிய எண்ணற்ற மீன்கள் அங்கு விளையாடுகின்றன.

இவ்வளவு பயங்கரமானதாகவும், கொடுமையானதாகவும் இந்தக் கடல் இருந்தாலும் சத்குரு சாயி இதை அழிக்கவல்லவர். அவரது பக்தர்கள் இதைப்பற்றிப் பயமடைய வேண்டியதில்லை. நமது சத்குரு இந்தக் கடலை பத்திரமாகக் கடப்பதற்கு வேண்டிய படகு போன்றவர்.

## பிரார்த்தனை

இப்போது நாம் சாயிபாபாவின் முன்னே முழுவதுமாக வீழ்ந்து அவர் பாதகமலங்களைப் பற்றிக்கொண்டு கீழ்க்கண்டவாறு எல்லோரும் எல்லாவற்றிற்குமாகப் பிரார்த்திப்போம்.

**''எங்களது மனம் கண்டவாறு அலையாமல் தங்களைத் தவிர வேறு எதையும் விரும்பாமல் இருக்கட்டும். இந்த சத்சரிதம் எல்லோருடைய இல்லங்களிலும் இருந்து தினசரி பாராயணம் செய்யப்படட்டும். இதைத் தினமும் முறையாகப் படிப்பவர்களின் துயரங்களைத் தீருங்கள்.''**

## பலஸ்ருதி (பாராயண பலன்)

இச்சரிதம் படிப்பதால் நீங்கள் பெறும் நலன்களைப் பற்றிச் சில வார்த்தைகள், புனித கோதாவரி நதியில் குளித்துவிட்டு ஷீர்டியில் உள்ள சமாதி மந்திரிலுள்ள பாபாவின் சமாதியை வணங்கித் தரிசித்து இந்த சத்சரிதத்தைப் படிக்கவோ அல்லது கேட்கவோ வேண்டும். இதைச் செய்தால் உங்கள் உடல், பொருள், ஆவியைத் தாக்கும் தீங்குகள் மறையும். தற்செயலாகச் சாயியின் கதைகளை நினைப்பதன் மூலம், உங்களை அறியாமலேயே நீங்கள் ஆன்மிக வாழ்வில் விருப்பம் கொள்வீர்கள். இச்சரிதத்தை ஆர்வமுடனும், பக்தியுடனும் படிப்பதால் உங்கள் பாவங்கள் அழிக்கப்படும். ஜனன மரணச் சுழலை ஒழிக்க நீங்கள் விரும்பினால் சாயியின் சரிதங்களைப் பாராயணம் செய்து, அவரை நினைத்து அவரது திருவடிகளில் உங்களைச் சேர்த்துக்கொள்ளுங்கள். நீங்கள் சாயி சரித சாகரத்தில் மூழ்கி மேலெழுந்து அதன் இன்பத்தை மற்றவர்களுக்குக் கூறும்போது அவற்றின் புதுப்புது நித்ய சுகந்தத்தை உணர்ந்து மற்றவர்களையும் தொல்லைகளிலிருந்து காப்பீர்கள்.

சாயியின் உருவையே நீங்கள் தொடர்ந்து தியானித்தால் நாளடைவில் உருவம் மறைந்து உங்கள் தன்னுணர்விலேயே கலந்துவிடும். தன்னையறிதலும், பிரம்மத்தை உணர்தலும் மிகக் கடினம். ஆனால் சகுண பிரம்மாவாகிய சாயியின் உருவத்தின் மூலம் வழிபட்டால்

உங்கள் பிரம்ம உணர்வின் முன்னேற்றம் எளிதாகும். பக்தனானவன் தன்னை சாயியிடம் பரிபூர்ண சரணாகதியாக்கிவிட்டால் தன்னுடைய தனித்தன்மையை இழந்து ஐக்கியமாகி கடலுடன் நதி சங்கமிப்பது போல் அவருடன் ஒன்றாகிறான். கனவிலோ, உறக்கத்திலோ அல்லது விழித்திருக்கும் நிலையிலோ இவ்வாறு அவருடன் இரண்டறக் கலந்தால் நீங்கள் சம்சார பந்தத்தை ஒழிக்கிறீர்கள். யாராயினும் குளித்துவிட்டு அன்புடனும், உண்மையுடனும் இதை ***ஒரு வாரத்திற்குள் படித்து முடித்தால் அவர்களைப் பீடித்த கேடுகள் மறையும்***. படிக்கக் கேட்பவர்களுக்கு வரும் அபாயங்களும் நீக்கப்படும்.

இதைப் பாராயணம் செய்து செல்வத்தை விரும்புபவன் செல்வத்தையும், நல்ல வியாபாரிகள் வியாபாரத்தில் வெற்றியையும் அடைவர். ***உண்மைக்கும், பக்திக்கும் தகுந்தவாறே பலன்களும் அமையும்***. இவைகளின்றி எவ்விதமான அனுபவமும் இல்லை. இச்சரிதத்தை பக்தியுடன் படித்தால் சாயி மனம் மகிழ்ந்து உங்கள் அறியாமையையும், ஏழ்மையையும் நீக்கி உங்களுக்கு ஞானமும், செல்வமும், க்ஷேமமும் நல்குவார். கருத்தூன்றிய மனத்துடன் ஒவ்வொரு நாளும் ஒரு அத்தியாயம் படித்தால் அது எல்லையற்ற ஆனந்தத்தைக் கொடுக்கும். தனது நலனை எவன் மனதில் கொண்டுள்ளானோ அவன் கட்டாயம் கவனமாகப் படிக்கவேண்டும். தொடரும் பிறவிகளில் ஒவ்வொரு பிறவியிலும் எப்போதும் சந்தோஷமாக அவன் சாயியை நினைப்பான். முக்கியமாக குருபூர்ணிமா, கோகுலாஷ்டமி, ராமநவமி, நவராத்திரி (பாபா சமாதியான விஜயதசமி) தினங்களில் இச்சரிதம் வீடுகளில் பாராயணம் செய்யப்படவேண்டும். இதைக் கவனமுடன் படித்தால் உங்கள் ஆசைகள் நிறைவேற்றப்படும்.

***அவர் பாதகமலங்களை உங்கள் மனதால் நினைப்பதால் சம்சார சாகரத்தைச் சுலபமாகக் கடப்பீர்கள். இதைக் கற்பதால் நோயாளிகள் குணமுற்று திடகாத்திரமடைவர். ஏழைகள் செல்வம் அடைவர்.***

**கீழ்நிலையில் உள்ளோரும், நசுக்கப்பட்டோரும் உன்னத நிலை பெறுவர். மனம் சலனங்களிலிருந்து விடுபட்டு ஒருநிலைப்படும்.**

நல்ல அன்பும், பக்தியுமுள்ள வாசகர்களே, கேட்போரே! உங்களை வணங்குகிறோம். வணங்கி ஒரு வேண்டுகோள் விடுக்கிறோம். தினமும், மாதக்கணக்கிலும் படித்த சாயியின் கதைகளை ஒருபோதும் மறக்காதீர்கள். நீங்கள் எவ்வளவு ஆவலுடன் படிக்கிறீர்களோ அல்லது கேட்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு நாங்கள் சாயியினால் உற்சாகமூட்டப்பட்டு உங்களுக்குச் சேவை செய்வதில் உதவியாக இருப்போம். இதன் ஆசிரியர், வாசகர் இருவரும் ஒத்துழைத்து உதவிசெய்து மகிழ்ச்சியுற வேண்டும்.

## ப்ரசாத் யாசனா – பிரசாதம் கோரல்

கீழ்க்கண்ட பிரசாதம் அல்லது உதவிகோரிப் பிரார்த்தித்து இவ்வத்தியாயத்தை முடிக்கிறோம்.

வாசகரும், பக்தர்களும் சாயியின் பாதகமலங்களை சர்வ பக்தி பூர்வமாக நினைக்கட்டும். சாயியின் உருவம் அவர்கள் கண்களில் நிலைக்கட்டும். அவர்கள் சாயிபாபாவை எல்லா உயிர்களிலும் காணட்டும்.

**ததாஸ்து – அப்படியே நடக்கட்டும்.**

***ஸ்ரீ சாயியைப் பணிக***

***அனைவர்க்கும் சாந்தி நிலவட்டும்***





# ஆரத்தி

ஜீவன்களுக்கு மகிழ்ச்சியை வழங்கும் ஓ! சாயிபாபா, தங்களுக்கு தீப ஆராதனை செய்கிறோம். தங்களுடைய சேவார்த்திகளும், பக்தர்களுமான எங்களுக்குத் தங்கள் பாதாரவிந்தங்களில் அமைதியைக் கொடுங்கள். ஆசைகளை அழித்து, எங்களது ஆத்மாவுக்குள்ளேயே தாங்கள் கலந்து, வேண்டுவோர்க்கு இறைவனைக் காட்டுகிறீர்கள். பேரார்வத்துடன் விரும்பினோர்க்குத் தாங்கள் அனுபவங்களையும் அல்லது உணர்வுகளையும் கொடுக்கிறீர்கள்.

ஓ! அன்புள்ளம் கொண்டோரே, தங்கள் சக்தி அத்தகையது. தங்கள் திருநாமஸ்மரணை எங்கள் சம்சார பயங்களைப் போக்குகிறது. தங்களது லீலைகள் ஆழங்காண முடியாதவை. எப்போதும் ஏழைகளுக்கும், ஆதரவற்றோர்களுக்கும் அருள்கிறீர்கள். இந்தக் கலியுகத்தில் சர்வவியாபியான, தத்தாவாகிய தாங்கள் சகுணப் பிரம்மமாக உண்மையில் அவதரித்தீர். வியாழக்கிழமை தோறும் தங்களிடம் வரும் பக்தர்களைக் கடவுளின் திருவடிகளைக் காணச்செய்து அவர்களின் சம்சார பயங்களைப் போக்குங்கள்.

ஓ! இறைவனுக்கெல்லாம் இறைவனே! எனது செல்வங்கள் யாவும் தங்களது சேவையில் இருக்கவேண்டும் எனப் பிரார்த்திக்கிறேன். சாதகப் பறவைக்கு மேகங்கள் சுத்தமான நீரை அளிப்பதுபோல் மாதவ்க்கு* மகிழ்வுடன் உணவளித்துத் தங்கள் வாக்கை நிலைநிறுத்துங்கள்!

**ஸ்ரீ சாயியைப் பணிக**
**அனைவர்க்கும் சாந்தி நிலவட்டும்**

---

* இந்த ஆரத்திப் பாடல் சமகாலத்தில் வாழ்ந்த மாதவ் அட்கர் என்னும் அடியவரால் இயற்றப்பட்டது.



# ஸ்ரீ சாயிபாபா
# அஷ்டோத்ர சத நாமாவளி

ஓம் ஸ்ரீ சாயிநாதாய நம:

'' ஸ்ரீ லக்ஷ்மிநாராயணாய நம:

'' ஸ்ரீ கிருஷ்ண ராம சிவ மாருத்யாதி ரூபாய நம:

'' சேக்ஷ சாயினே நம:

'' கோதாவரி தடசீரடி வாஸினே நம:

'' பக்த ஹ்ருதாலயாய நம:

'' சர்வ ஹ்ருத்வாஸினே நம:

'' பூதாவாஸாய நம:

'' பூதபவிஷ்யத் பாவ வர்ஜிதாய நம:

'' காலாதீதாய நம: 10

'' காலாய நம:

'' காலகாலாய நம:

'' காலதர்பதமனாய நம:

'' ம்ருத்யுஞ்ஜயாய நம:

'' அமர்த்யாய நம:

'' மர்த்யாபயப்ரதாய நம:

ஓம் ஜீவாதாராய நம:

'' சர்வாதாராய நம:

'' பக்தாவன சமர்த்தாய நம:

'' பக்தாவனப் ப்ரதிக்ஞாய நம:

'' அன்னவஸ்த்ரதாய நம: 20
'' ஆரோக்யக்ஷேமதாய நம:
'' தனமாங்கல்யப்ரதாய நம:
'' ருத்தி சித்திதாய நம:
'' புத்ர மித்ர களத்ர பந்துதாய நம:
'' யோக க்ஷேமவஹாய நம:
'' ஆபத்பாந்தவாய நம:
'' மார்க்பந்தவே நம:
'' புக்தி முக்தி ஸ்வர்காபவர்கதாய நம:
'' ப்ரியாய நம: 30
'' ப்ரீதிவர்தனாய நம:
'' அந்தர்யாமினே நம:
'' சச்சிதாத்மனே நம:
'' ஆனந்தாய நம:
'' ஆனந்ததாய நம:
'' பரமேஸ்வராய நம:
'' பரப்ரம்ஹணே நம:
'' பரமாத்மனே நம:
'' ஞானஸ்வரூபிணே நம:
'' ஜகத: பித்ரே நம: 40
'' பக்தனாம் மாத்ரு தாத்ரு பிதாமஹாய நம:
'' பக்தாபயப்ரதாய நம:
ஓம் பக்த பராதீனாய நம:
'' பக்தானுக்ரஹ காதராய நம:
'' சரணாகதவத்ஸலாய நம:
'' பக்தி சக்தி ப்ரதாய நம:
'' ஞான வைராக்யதாய நம:
'' ப்ரேமப்ரதாய நம: 50
'' சம்சயஹ்ருதய தௌர்பல்ய பாபகர்மவாஸனா க்ஷயகராய நம:

'' ஹ்ருதய க்ரந்திபேதகாய நம:
'' கர்மத்வம்ஸினே நம:
'' சுத்த சத்வஸ்திதாய நம:
'' குணாதீத குணாத்மனே நம:
'' அனந்த கல்யாண குணாய நம:
'' அமித பராக்ரமாய நம:
'' ஜயினே நம:
'' துர்தர்ஷாக்ஷோப்யாய நம:
'' அபராஜிதாய நம:
'' த்ருலோகேஷு அஸ்கந்திதகதயே நம:
'' அசக்யரஹிதாய நம: 60
'' சர்வசக்தி மூர்த்தயே நம:
'' ஸுரூபஸுந்தராய நம:
'' ஸுலோசனாய நம:
'' பஹுரூப விஸ்வ மூர்த்தயே நம:
'' அரூபாவ்யக்தாய நம:
'' அசிந்த்யாயா நம:
'' ஸூக்ஷ்மாய நம:
'' சர்வாந்தர்யாமினே நம:
ஓம் மனோவாக தீதாய நம:
'' ப்ரேமமூர்த்தயே நம: 70
'' ஸுலபதுர்லபாய நம:
'' அஸஹாய ஸஹாயாய நம:
'' அநாதநாத தீனபந்தவே நம:
'' சர்வ பாரப்ருதே நம:
'' அகர்மானேக கர்மஸுகர்மிணே நம:
'' புண்யஸ்ரவண கீர்த்தனாய நம:
'' தீர்த்தாய நம:
'' வாசுதேவாய நம:
'' ஸதாம் கதயே நம:

'' சத்பராயணாய நம: 80
'' லோகநாதாய நம:
'' பாவனானகாய நம:
'' அம்ருதாம்சவே நம:
'' பாஸ்கரப்ரபாய நம:
'' ப்ருஹ்மசர்யதப: சர்யாதி ஸுவ்ரதாய நம:
'' சத்ய தர்ம பராயணாய நம:
'' சித்தேஸ்வராய நம:
'' சித்த சங்கல்பாய நம:
'' யோகேஸ்வராய நம:
'' பகவதே நம: 90
'' பக்தவத்ஸலாய நம:
'' சத்புருஷாய நம:
'' புருஷோத்தமாய நம:
'' சத்ய தத்வ போதகாய நம:
ஓம் காமாதி சர்வ அக்ஞானத்வம்ஸினே நம:
'' அபேதா நந்தானுபவப்ரதாய நம:
'' சம சர்வமத சம்மதாய நம:
'' தக்ஷிணாமூர்த்தயே நம:
'' வேங்கடேசரமணாய நம:
'' அத்புதானந்தசர்யாய நம: 100
'' ப்ரபன்னார்த்திஹராய நம:
'' சம்சார சர்வ துக்கக்ஷயகராய நம:
'' சர்வவித் சர்வதோமுகாய நம:
'' சர்வாந்தர்பஹிஸ்திதாய நம:
'' சர்வமங்களகராய நம:
'' சர்வாபீஷ்டப்ரதாய நம:
'' சமரஸ சன்மார்க்க ஸ்தாபனாய நம:
ஓம் ஸ்ரீ சமர்த்த சத்குரு சாயிநாதாய நம: 108

***ஜெய் சாய்ராம்!***